**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**அசல் வழக்கு எண். 1188/2024** **நாள்- 28.11.2025**

**வா.சா.1. ஜெயராமன்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

அய்யனாருக்கு எப்போது எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று கேட்டால் 03.04.2021 ம் தேதி என் வீட்டில் வைத்து ரூ.110000/- கொடுத்தேன். பணம் கொடுத்த சமயத்தில் என் வீட்டில் யார் இருந்தார்கள் என்று கேட்டால் நானும் என் மகனும் இருந்தோம் பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். எப்போதுமே என் வீட்டில் ரூ .1/- லட்சம் பணம் வைத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. பொதுவாக கடன் கொடுக்கும் போது வட்டியை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்று வாய்மொழியாக ஒப்பந்தம் போடுவது வழக்கம். அய்யனார் எனக்கு மாதம் மாதம் வட்டி கொடுக்க வேண்டும் என்று பேசிக் கொண்டோம். மாதம் ரூ.1100/- வட்டி செலுத்த வேண்டும் என்று பேசிக் கொண்டோம். அந்த சமயம் பிரதிவாதி எனக்கு கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்தார். எனக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கடனுறுதிசீட்டு வா.சா.ஆ.1 ஆகும். வா.சா.ஆ.1-ல் எண்ணால் எழுதப்பட்ட மைக்கும் எழுத்தால் எழுதப்பட்ட எழுத்திற்கும் மை வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. வித்தியாசம் உள்ளது என்றும் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதிசீட்டை குருமூர்த்தி என்பவர் என் வீட்டில் வைத்து எழுதினார். பிரதிவாதி பணம் வாங்கியதாக சொல்லும் சமயத்தில் நானும் என் மகனும் இருந்ததாக சொல்லும் நிலைமையில் குருமூர்த்தி என் வீட்டில் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. குருமூர்த்தி கடனுறுதிசீட்டு எழுதும் போது என் வீட்டில் இருந்தார் என்று வழக்குரை, வழக்கறிஞர் அறிவிப்பு, நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிமாதம் வட்டி தரவில்லை என்பதற்காக நான்நடவடிக்கை எடுத்தேனா என்று கேட்டால் இல்லை. நான், பிரதிவாதியிடம் நேரடியாகவோ வேறு நபர்கள் மூலமாகவோ வட்டி கேட்கவில்லை என்றால் கேட்டேன் கொடுக்கவில்லை. எனக்கு 4 மகன்கள். என் மகன் 15 வருடங்களுக்கு முன்பாக தென்கரை கிராமம் போர்மணித்தேவர் என்ற கருப்பையாத்தேவர் வாரிசிடமிருந்து சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தை நாங்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பாக பிரதிவாதி அனுபவம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் மகன் கிரையம் வாங்கிய பின்பும் பிரதிவாதி அந்த சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றும், அதனால் எங்களுக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதனால் எங்களுக்கும் பிரதிவாதிக்கும் இடையே 15 வருடங்களாக பேச்சு வார்த்தை கிடையாது

என்றால் சரியல்ல. நான் கீழராஜகுலராமன் காவல் நிலையத்தில் 2023 ம் ஆண்டு பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்தேனா என்று கேட்டால் இல்லை. நான் பிரதிவாதிக்கு ஒரு போதும் கடன் கொடுத்தது இல்லை என்றும் பிரதிவாதி கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் எங்களுக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை உள்ள நிலையில் பிரதிவாதி எங்களிடம் கடன் வாங்குவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2023 ம் ஆண்டு மோசடியாக பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் பிரதிவாதி மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்பதால் மோசடியான ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.